# அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி) கோவை - 18

# தமிழ்த்துறை

(2018 -2021 ஆம் ஆண்டு இளங்கலை - அறிவியல் பட்டம் பயிலும் மாணவர்களுக்கு உரியது)

## இரண்டாம் ஆண்டு - மூன்றாம் பருவம்

## பகுதி - I தமிழ் - தாள் III

(விழுமியம்; செய்யுள் - உரைநடை மொழித்திறன் - படைப்பாற்றல்)


தொகுப்பாசிரியர்கள் - (கௌரவ விரிவுரையாளர்கள்)

அலகு - I : முனைவர் வெ. பாலசரஸ்வதி

அலகு - II : முனைவர் வெ. பாலசரஸ்வதி

அலகு - III : முனைவர் கி. மலர்விழி

அலகு - IV : முனைவர் க. தங்கராஜ்

அலகு - V : முனைவர் கி. மலர்விழி

தமிழ்த்துறை

# அரசு கலைக் கல்லூரி

(தன்னாட்சி)

கோயம்புத்தூர்-18

## மூன்றாம் பருவம்

(2019-2020ஆம் ஆண்டு இளங்கலை - அறிவியல் பட்டம் பயிலும் இரண்டாமாண்டு மாணவர்களுக்குரியது)

**பாடத் திட்டம்**

**தமிழ் - தாள் III**

(விழுமியம்: செய்யுள், உரைநடை - மொழித்திறன் - படைப்பாற்றல்)

**அலகு 1**

1. சிலப்பதிகாரம் - கானல்வரி
2. மணிமேகலை - சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை
3. சீவக சிந்தாமணி - நாமகள் இலம்பகம், நாட்டு வளம், நகர் வளம்

**அலகு 2**

1. கம்பராமாயணம் - குகப்படலம்
2. இராவணகாவியம் - தாய்மொழிப்படலம்
3. பெரிய புராணம் - சிறுத்தொண்ட நாயனார் புராணம்

**அலகு 3 நாடகம் - பாரதிதாசன் நாடகங்கள்**

1. கற்கண்டு
2. பொறுமை கடலின் பெரிது
3. இன்பக் கடல்
4. சத்தி முத்தப் புலவர்

**அலகு 4 மொழித்திறன்**

**இலக்கணம் : பாவகை அணிவகை (பாடப் பகுதியைத் தழுவியது)**

1. (அ) வெண்பா, ஆசிரியப்பா - பொது இலக்கணம்

ஆ) பொருள்கோள்கள்

2. **அணி இலக்கணம் (பாடம் தழுவியது)**
உவமையணி, தற்குறிப்பேற்றணி, உயர்வு நவிற்சியணி, இல்பொருள் உவமையணி, வேற்றுமையணி, சொற்பொருள் பின்வருநிலையணி முதலியன.

3. **இலக்கிய வரலாறு - பாடம் தழுவியது**

அ. 1. ஐம்பெருங்காப்பியங்கள்
2. ஐஞ்சிறுகாப்பியங்கள்
3. பக்திக் காப்பியங்கள் - பெரிய புராணம், கம்பராமாயணம்

ஆ. 4. காப்பியங்களின் தோற்றமும் வளர்ச்சியும்
5. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

அலகு 5 படைப்பாற்றல்

1. **கவிதைப் படைப்பு**

(புதுக்கவிதை : வானவில், இமைகள், நிலவு, சூரியன், வறுமை, வெற்றி, மேகம், கடல், எழுத்து, சதுரங்கம், தென்றல் பற்றிய தலைப்புகள்)

2. **சுயசிந்தனைக் கட்டுரைகள்**

அறிவியல் கட்டுரைகள், புதுஉலகம், மனித உரிமை, சுற்றுச்சூழல், வாழிட சுகாதாரம், பாலின வேறுபாடு, சமூகக் குற்றத் தடுப்பு, சிறுவர் உழைப்பு போன்றன.

3. **விமர்சனம்**

அ) கவிதை விமர்சனம்

ஆ) நூல் விமர்சனம்

இ) திரை விமர்சனம்

அலகு 1

1. சிலப்பதிகாரம் - கானல்வரி
2. மணிமேகலை - சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை
3. சீவக சிந்தாமணி - நாமகள் இலம்பகம், நாட்டுவளம் நகர்வளம்

## 1. சிலப்பதிகாரம் - கானல்வரி

அலகு - 1

## 1. சிலப்பதிகாரம்

| | |
|---|---|
| ஆசிரியர் | - இளங்கோவடிகள் |
| சமயம் | - சமணம் |
| காலம் | - கி.பி. 2-ஆம் நூற்றாண்டு |
| பெரும் பிரிவு | - காண்டம்-3 |
| உட்பிரிவு | - காதை-30 |
| பாட்டுடைத் தலைவி | - கண்ணகி |
| குறிப்பு | - முதற் காப்பியம் |

### கானல்வரி

அழகிய கோட்டிலே மலர்சூடி, மைதீற்றிய பெரிய கண்களையுடைய மணமகளின் ஒப்பனைக் கோலம்போல் அழகினைப் பொருந்தியவளான மாதவி யாழினைத் தொழுது வாங்கி, பண்ணல் முதலிய எண் வகையாலும் இசையை எழுப்பி, வார்தல் முதலிய எட்டு வகை இசைக் காரணத்தாலும் ஆராய்ந்து செவியால் ஓர்த்து, பணியாதெனக் கூறிக் கோவலன் கையில் யாழினை நீட்ட, அவன் வாங்கி, ஆற்றுவரியும் கானல் வரியுமாகி இசைப்பாட்டுக்கள் பலவற்றை யாழிலிட்டுப் பாடினான். அவன் பாடிய பாட்டுக்கள் அகப்பொருட்டுறை அமைந்தனவாகலின், அவற்றைக் கேட்ட மாதவி, 'இவற்றுள் ஓர் குறிப்பு உண்டு; இவன் தன்னிலை மயங்கினான்' எனக் கருதி, யாழினை வாங்கித் தானும் ஓர் குறிப்புடையாள் போல வரிப் பாட்டுக்கள் பலவற்றைப் பாடினாள். யாழிசைமேல் வைத்து ஊழ்வினை வந்து உருத்ததாகலின், கோவலன் அவள் பாடியவற்றைக் கேட்டு, 'யான் கானல்வரி பாட, இவள் மிக்க மாயமுடையலாகலின் வேறொன்றின் மேல் மனம் வைத்துப் பாடினாள்' என உட்கொண்டு, அவளை அணைத்த கை நெகிழ்ந்தவனாய் எழுந்து ஏவலாளர் சூழ்தரப் போயினான்; போக, மாதவியும் கையற்ற நெஞ்சினளாய் வையத்தின் உள்ளே புக்குக் காதலனுடனன்றியே தன் மனையை அடைந்தாள்.

சிலப்பதிகாரம்

மேற்காணும் இணைப்பு புலனக் குழுவில் பதிவிடப்பட்டுள்ளது. அவற்றை படிக்க மேற்காணும் Linkகை (Ctrlயை) அழுத்திக்கொண்டு கிளிக் செய்யவும்.

## மாதிரி வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. சிலப்பதிகாரத்தின் காண்டங்கள் எத்தனை?
2. சிலம்பின் காலம் யாது?
3. ___________மேல் வைத்து ஊழ்வினை வந்தருத்தியது?
4. கானல்வரி எக்காண்டத்தில் அமைந்துள்ளது.
5. கானல்வரியில் இடம்பெறும் இரண்டு முக்கிய கதாப்பாத்திரங்கள்
6. கானல்வரிப் பாடலில் எந்த ஆறு புகழப்படுகிறது?
7. சிலம்பும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் சரி/தவறு.
8. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

### குறுகிய வினாக்கள்

1. சிலம்பின் முப்பெரும் உண்மைகளை விளக்குக.
2. சிலப்பதிகாரம் காப்பியத்தின் அமைப்பை விளக்குக.
3. கானல்வரி – முழுவதும் இசையின் சிறப்பாகும் - விளக்குக.
4. கானல்வரி சிலப்பதிகாரம் கதைக்கு திருப்பு முனையாக இருப்பதை விவரி.

## 2. மணிமேகலை - சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை

### 2. மணிமேகலை

| | |
|---|---|
| ஆசிரியர் | - சீத்தலைச்சாத்தனார் |
| சமயம் | - பௌத்தம் |
| காலம் | - கி.பி.2-ஆம் நூற்றாண்டு |
| உட்பிரிவு | - காதை-30 |
| பாட்டுடைத் தலைவி | - மணிமேகலை |
| குறிப்பு | - பிற சமயங்களை எதிர்க்கும் முதல் நூல் |

### சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை

உதயகுமரன் சம்பாபதியை வணங்கி இங்ஙனம் வஞ்சினங் கூறுகையில் அவன் கேட்கும்படி, "நீ எம் பெருமாட்டியின் முன் ஆராய்ந்து பாராமற் சூளுறவு மொழிந்தனை; அதனால் யாதொரு பயனுமில்லை" என்று ஆங்குள்ள சித்திரங்களுள் ஒன்றைப் பொருந்தியுள்ள தெய்வங் கூறிற்று. அவ்வுரை கேட்டு அவன் மனங் கலங்கி வருந்தி, "மணிமேகலையை மறப்பாயென்று முன்னங்கூறிய தெய்வத்தின் மொழியும் வியப்பைத் தருகின்றது; தெய்வத்தன்மை யுள்ளதாக இருத்தலின் அவள் ஏந்திய பாத்திரமும் வியப்பைத் தருகின்றது; இச்சித்திரம் பேசியதும் வியப்பை விளைக்கின்றது; இவற்றையெல்லாம் மணிமேகலையின் செய்தியை அறிந்துகொண்ட பின்பு அறிவோம்" என்று துணிந்து மீண்டு தன் இருப்பிடத்தையடைந்தான். மணிமேகலை "நம் வடிவத்தோடு திரிந்தால் உதயகுமரன் விட்டு நீங்கான்; ஆகலின் நாம் காயசண்டிகை வடிவங்கொள்ளுதலே நன்று" என்று எண்ணி அவ்வடிவுகொண்டு சம்பாபதியின் கோயிலிலிருந்து அமுதசுரபியைக் கையிலேந்திக் கொண்டு யாங்கணும் சென்று பசித்து வந்த யாவருக்கும் உணவளித்து வருபவள், ஒரு நாள் அந்நகரத்துள்ள சிறைக்கோட்டத்திற் புகுந்து, அங்கே பசியால் வருந்துவோரை அருளுடன் பார்த்து இனிய மொழி கூறி உண்பிப்பாளாயினள். அவள் ஒரு பாத்திரத்திலிருந்தே பலருக்கு உணவளித்தலைக் கண்ட காவலாளர் மிக்க வியப்படைந்து, "இப்பாத்திரத்தின் மேன்மையையும் இவள் செய்கையையும் அரசனுக்குத் தெரிவிப்பேம்" என நினைந்து சென்று, சீர்த்தியென்னும் இராசமாதேவியுடன் ஒரு மண்டபத்தில் மிக்க சிறப்புடன் வீற்றிருக்கும் வேந்தனுடைய செவ்வியை நோக்கிச் சேய்மையில் வணங்கி நின்று, "மாவண்கிள்ளி ஊழிதோ றூழி

சம்பாபதியின் பாதங்களை வணங்கி உதயகுமரன் வஞ்சினம் உரைத்தது முந்தைய காதை ஆகும். சம்பாபதியின் கோயிலுக்குள் சென்ற அழகிய தோற்றம் கொண்ட மணிமேகலை வராமல் நான் செல்லமாட்டேன் என்று சூளுரைக்கிறான். உதயகுமரன், சித்திரப்பாவை ஒன்று உன் சூளுரை பயனற்றது என உரைக்கிறது. மணிமேகலையிடத்தே கொண்ட எண்ணத்தை மறந்துவிட அறிவுறுத்தியது. மணிமேகலை கையில் ஏந்திய உணவு வற்றாத பாத்திரம் அனைவரது பசியையும் போக்கும் அமுத சுரபி வியப்பிற்குரியது இவற்றை சித்திரம் சொன்னதும் வியப்பிற்குரியது, என வியப்பிற்குரிய நிகழ்வுகள் மணிமேகலையில் ˙காண முடிகிறது. வியப்பிற்குரிய நிகழ்வுகளைக் கண்டு பின்னர் அறிந்து கொள்வோம் என பெருமூச்சுடன் உதயகுமாரன் விலகிச் செல்கிறான்.

இரவு வர்ணனை அமைகிறது அகன்ற இடத்தை உடையதாகிய ஞாலத்தினை இருளானது உண்ணுமாறு பகலாகிய அரசினை புறமுதுகிடச் செய்து, பறை எழுந்து முழக்கமுட கருநிறத்து யானையாகிய இரவானது

கட்டவிழந்து வரும் ஒரு மதயானையைப் போல் வந்தது நகரத்து இளைஞர்கள் துணையுடன் மகிழ்ந்திருக்க துருத்திமுனைச் செந்தீ போல பெருமூச்செறிந்த உதயகுமாரன் தன் இருப்பிடம் நோக்கிச் சென்றான்.

மாதவியின் மகளாகப் பொதுவிடங்களில் சுற்றினால் மன்னனின் மகனான உதயகுமரன் தன்னைத் தொடர்ந்து வருவான் என எண்ணி ஊரால் அறியப்படும் காயசண்டிகையின் வடிவத்தினை மேற்கொண்டு மணிமேகலை பசியோடு இருந்த மக்களுக்கு உணவளித்து வந்தாள்.

பிழை செய்து மன்னனால் தண்டிக்கப்பட்டு சிறையில் இருக்கும் கைதிகளுக்கு உணவளிக்க சிறைக் கோட்டம் செல்கிறாள் மணிமேகலை. ‘அனைவரும் அமுதூட்டியது ஒரே ஒரு பாத்திரத்திலிருந்தே’ என அறிந்த சிறைக் காவலர் **இந்நிகழ்வை** தம் மன்னனுக்கு எடுத்துச்சொல்ல செல்கிறார்.

**பூம்பொழில் வர்ணனை:-**

நெடியோளாகிய திருமாலின் வடிவமான வாமனனுக்கு தானமளித்த ‘மாவலி’ வழித்தோன்றலாகிய மன்னன் தன் தேவியோடு மலர்வனத்தில் உள்ளான்.

அன்னமும் மயிலும் தன் துணையோடு ஆடிக் கொண்டிருக்கும் காட்சி வர்ணிக்கப்படுகிறது. மாங்கனியின் அருகில் அமர்ந்திருந்த புள்ளிகளுடைய மயில் கிளிக்கு ஊட்டும் பாவை போல் காட்சி தந்தது. [மாங்கனி – கிளிகள் - மயில் - பாலூட்டும் பாவை] சோலையில் செய்து வைத்த மலர் ஊசலிலே பெண் குரங்கினை ஏற்றி வைத்து ஆண் குரங்கு ஊசலாட்டும் காட்சி, பசுமையான மூங்கிலோடு வெண்கடம்பம் சேர்ந்த காட்சி கண்ணனும் பலராமனும் நின்ற காட்சி போக வர்ணிக்கப்படுகிறது. இசைக்கருவிகளை நுட்பமாக கற்ற கலைஞர்கள் நிகழ்ச்சி நடந்த மகிழ்ந்திருந்தான் மன்னன். கீரிப்பிள்ளை, முயல், மான், ஆடு ஆகியவற்றை தன் பால் அழைத்து மகிழ்ந்தான். பின்னர் அழகிய அணிகளால் அமைந்த பசும்பொன் மண்டபத்தில் இந்திரன் போன்று சோழமன்னன் வீற்றிருக்கிறான்.

சிறைக்காவலன் மன்னவளை வாழ்த்தி தான் சொல்ல வந்த செய்தியை சொல்கிறான் காய சண்டிகையின் வடிவில் அட்சயப் பாத்திரம் கொண்டு வந்த

பெண் அள்ள அள்ள குறையாது அனைவருக்கும் உணவளித்த அதிசயத்தைக் பணிக்கிறான். மணிமேகலை செல்கிறாள், மன்னனை வாழ்த்தி நிற்கிறாள். மன்னன் பாத்திரம் கிடைத்த வகையை வினவுகிறார்.'நாள் வித்தியாதர மங்கை சாபத்தால் திரிந்து வந்தேன். யானைத்தீ நோய் பசிப்பிணி நீங்கியது; பசியினால் உடல் தளர்ந்த மக்கட்கு உணவு வழங்கி உயிர்காக்கும் மருந்து இது' என்கிறாள் மணிமேகலை. தன் உருவத்திற்கு ஏற்ப கூறுகிறாள். மன்னன் தன் என்ன செய்ய வேண்டும் என மணிமேகலையிடம் வினவுகிறான். சிறைச்சாலையை அழிந்துவிட்டு, அறவோர்களுக்கு உரிய அறக்கோட்டமாக மாற்றுக 'நீ வாழ்க' என்கிறாள். அரசாளும் வேந்தனும் அவ்வாறே செய்தருளினான்.

மணிமேகலை

மேற்காணும் இணைப்பு புலனக் குழுவில் பதிவிடப்பட்டுள்ளது. அவற்றை படிக்க மேற்காணும் Linkகை (Ctrlயை) அழுத்திக்கொண்டு கிளிக் செய்யவும்.

இக்காப்பியத்தில் இருந்து தேர்வுக்கு பின்வருமாறு வினாக்கள் கேட்கப்படலாம்.

**ஒரு மதிப்பெண் வினாக்கள்:-**

1. மணிமேகலையின் ஆசிரியர் யார்?
2. மணிமேகலை யாருடைய வடிவில் பொது இடங்களுக்குச் சென்றாள்?
3. மணிமேகலையின் தாய் யார்?
4. மணிமேகலை______________மதத்தை வலியுறுத்துகிறது.
5. மணிமேகலையில் மொத்தம் 30 காதைகள் சரி/தவறு.
6. மணிமேகலையில் பெரும்பிரிவு இல்லைசரி/தவறு.

**குறுகிய வினாக்கள்:-**

1. மணிமேகலை சிறைக்கோட்டம் சென்ற செய்தியை விளக்குக.

2. சீத்தலைச் சாத்தனார் பூம்பொழில் சோலையை எவ்வாறு வர்ணிக்கின்றார்?
3. மணிமேகலையில் வியப்பான செய்திகளாக சொல்லப்படுவன யாவை?
4. மணிமேகலை காப்பிய அமைப்பை விவரி.

**விரிவான வினாக்கள்:-**

சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகியது எவ்வாறு விளக்குக.

3 சீவக சிந்தாமணி - நாமகள் இலம்பகம், நாட்டுவளம் நகர்வளம்

## 3. சீவக சிந்தாமணி

| | |
|---|---|
| ஆசிரியர் | - திருத்தக்கதேவர் |
| சமயம் | - சமணம் |
| காலம் | - கி.பி.9-ஆம் நூற்றாண்டு |
| உட்பிரிவு | - சருக்கம்-13 |
| பாடல் | - 3145 |
| பாட்டுடைத் தலைவன் | - சீவகன் |
| குறிப்பு | - முழுவதும் விருத்தப்பாவால் இயற்றப்பட்ட காப்பியம் |

## நாமகள் இலம்பகம் - நாட்டு வளம், நகர் வளம்

சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம்பெருங்காப்பியங்களுள் சீவக சிந்தாமணி காலத்தால் முதன்மையானதாகும். வடமொழியில் உள்ள சீவகன் கதைகள் பலவற்றைப் பின்பற்றித் தமிழில் பாடப்பட்டது இந்நூல். இதற்கு முதல் நூல் "க்ஷத்திர சூடாமணி" என்பர். இக்காப்பியத் தலைவன் பெயர் சீவகன் ஆகும். சிந்தாமணி என்பது தேவலோகத்தில் உள்ள ஒரு மணியாகும். அது கற்பகத்தரு மற்றும் காமதேனு போன்று கேட்டதைத் தரும் இயல்புடையதாகும். அதனால்தான் 'சீவகனுடைய கதையைக் கூறும் சிந்தாமணி போன்ற காப்பியம்' என்ற பொருளில் இதற்குச் சீவக சிந்தாமணி எனப் பெயரிட்டார் இக்காப்பியத்தின் ஆசிரியர் திருத்தக்கதேவர். சீவக சிந்தாமணி மொத்தம் 3145 பாடல்களைக் கொண்டது. பதின்மூன்று இலம்பகங்களையுடையது. இலம்பகம் என்பதற்கு மாலை என்பது பொருளாகும். அத்தியாயம் என்றும் சொல்லலாம். அதாவது உட்பிரிவுக்குத் திருத்தக்கதேவர் வைத்த பெயர் இலம்பகம் ஆகும். முத்தி இலம்பகம் தவிர ஏனையவை மகளிர் பெயரையே பெற்றுள்ளன. பெரும்பாலான இலம்பகங்களில் மணநிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. சீவகன் எட்டு பெண்களை மணக்கின்ற நிகழ்ச்சி எட்டு இலம்பகங்களில் கூறப்பட்டுள்ளது. எனவே தான் இக்காப்பியத்திற்கு 'மணநூல்' என்ற பெயரும் உண்டு. பதிகத்தில் [illegible] கூறப்பட்டுள்ளது.

SHOT ON REDMI 7
AI DUAL CAMERA

சீவக சிந்தாமணி

மேற்காணும் இணைப்பு புலனக் குழுவில் பதிவிடப்பட்டுள்ளது. அவற்றை படிக்க மேற்காணும் Linkகை (Ctrlயை) அழுத்திக்கொண்டு கிளிக் செய்யவும்.

இக்காப்பியத்தில் இருந்து தேர்வுக்கு பின்வருமாறு வினாக்கள் கேட்கப்படலாம்.

### ஒரு மதிப்பெண் வினாக்கள்:-

1. சீவகசிந்தாமணியை இயற்றியவர் யார்?
2. இக்காப்பியத்திற்கு மற்றொரு பெயர் யாது?
3. இக்காப்பியத்தின் உட்பிரிவு யாது?
4. சீவகசிந்தாமணியில் பாட்டுடைத்தலைவன் யார்?
5. திருத்தக்கத் தேவர் இயற்றிய வேறு நூல்கள்
6. இக்காப்பியம் முழுவதும் எவ்வகைப் பாவகையால் எழுதப்பட்டுள்ளது.

### குறுகிய வினாக்கள்:-

1. சீவக சிந்தாமணி வழங்கும் உழவர்கள் செயல்பாடுகள் ?
2. நாட்டு வளம் வழங்கும் இயற்கைக் காட்சிகள் ?

### விரிவான விடை

1. சீவக சிந்தாமணி வழங்கும் நாட்டு வளம் நகர் வளத்தை விவரிக்க.